DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 124/2024** |
| Deposition of Witness for | : PW7 |
| Name | : டாக்டர். அகிலாண்டபாரதி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 07.05.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 7th May 2026.

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போதுதனியார் மருத்துவமனையில் மருததுவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.02.2015 அன்று சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் நான் பணியில் இருந்தபோது இரவு 10.05 மணியளவில் கோமதி என்பவர் சிகிச்சைக்கு வந்தார். அவர் தனது கணவர் தன்னை இரவு 9.45 மணியளவில் தனது வீட்டில் வைத்து கத்தியால் தாக்கியதாக கூறினார். நான் அவரை பரிசோதனை செய்ததில்,கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1. அவரது வலதுபுறம் முதுகு பகுதியில் ஸ்கேப்புல எலும்புக்கு உட்புறம் 4 செ.மீ துாரத்தில் ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது. அந்த காயத்தின் அடியில் எலும்பு முறிவு இருக்குமா என்று சந்தேகம் இருந்தது.

அவரது இரத்த அழுத்தம் குறைவாக காணப்பட்டது. அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்த பிறகு மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லுாரிக்கு

அனுப்பி வைத்தேன். திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் அவருக்கு வலது நுரையீரலில் இரத்தம் தேங்கி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அவரது மார்பு கூடு திறக்கப்பட்டு இரத்தம் வெளியேற்றப்பட்டது. திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைக்கான ஆவணங்களின் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்றழித்தேன். அவரது காயச்சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட மேற்படி காயம் கத்தியால் அவரது குத்தப்படும் போது ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

காயம்பட்ட நபருக்கான அறுவை சிகிச்சை என்னால் செய்யப்பட்டதா என்றால் இல்லை. காயம்பட்ட நபருக்கு நுண்கதிர் படம் என்னால் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. காயம்பட்ட நபர் கூர்மையான கம்பி அல்லது கூர்மையான கல் மீது மல்லாக்க விழுந்தால் நான் முதல்விசாரணையில் கூறிய காயம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்பில்லை.

மறுவிசாரணை இல்லை.